

தினமணி

செவ்வாய்க்கிழமை, 17 நவம்பர் 2026



மண்டல பூஜை: சபரிமலை கோயில் நடை திறப்பு



சபரிமலை ஐயப்பன் கோயில் நடை மண்டல- மகர விளக்கு மஹோத்ஸவத்துக்காக திங்கள்கிழமை மாலை திறக்கப்பட்ட நிலையில் புதிய மேல்சாந்திகளாகப் பொறுப்பேற்க இருமுடியுடன் வந்த ஐயப்பன் சந்நிதானம் மேல்சாந்தி அரீக்கரை சுப்ரமணியன் நம்பூதிரி (வலது), மாளிகைபுரத்தம்மன் சந்நிதானம் மேல்சாந்தி தாமோதரன் நம்பூதிரி.

சபரிமலை, நவ. 16: சபரிமலை ஐயப்பன் கோயில் நடை மண்டல பூஜைக்காக திங்கள்கிழமை மாலை 4 மணிக்குத் திறக்கப்பட்டது.

பதவிக்காலம் முடிவடைய உள்ள மேல்சாந்தி இ.டி.பிரசாத் நம்பூதிரி கோயிலைத் திறந்து பாரம்பரிய விளக்கை ஏற்றி வைத்தார். தந்திரி கண்டரு பிரம்மதத்தன் முன்னிலையில் ஐயப்பன் கோயில் நடை திறக்கப்பட்டது. அப்போது சபரிமலையில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் 'சுவாமியே சரணம் ஐயப்பா' என்ற கோஷத்தை எழுப்பினர்.

இதைத் தொடர்ந்து கோயிலுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மேல்சாந்திகளை இ.டி.பிரசாத் நம்பூதிரி, சந்நிதானத்துக்கு பதினெட்டாம் படி வழியே அழைத்து வந்தார். அதன் பின் சபரிமலை கோயிலுக்கு புதிய மேல்சாந்தியாக நியமிக்கப்பட்டுள்ள அரீக்கரை சுப்ரமணியன் சங்கரன் நம்பூதிரியை தந்திரி, மாளிகைப்புரம் கோயிலில் புதிய தலைமை அர்ச்சகர் தாமோதரன் நம்பூதிரிக்கு நன்னீராட்டு அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் அவர்கள் பொறுப்பேற்றனர்.

ஐயப்பன் கோயில் நடை திறக்கப்பட்டு பாரம்பரிய விளக்கு ஏற்றப்பட்டதும் அங்கு திரண்டிருந்த திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரியத் தலைவர் கே.ஜெயகுமார், காவல் துறை ஏடிஜிபி (சட்டம்-ஒழுங்கு) பி.விஜயன் உள்ளிட்டோருக்கு விபூதி பிரசாதம் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக கேரள முதல்வர் வி.டி.சதீசன், எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் 'ஒவ்வொரு ஐயப்ப பக்தருக்கும் சபரிமலை யாத்திரை என்பது வெறும் புனிதப் பயணம் மட்டுமின்றி அசைக்க முடியாத நம்பிக்கை, இதயபூர்வமான பிரார்த்தனை ஆகியவற்றுக்கான யாத்திரையாகும். கேரளத்துக்கு வரும் ஒவ்வொரு பக்தரும் நன்கு வரவேற்கப்பட்டதாகவும், அக்கறையுடன் கவனித்துக் கொள்ளப்பட்டதாகவும் உணர வேண்டும் என்று விரும்புகிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் மண்டல பூஜை வரும் டிசம்பர் 27ஆம் தேதி நடைபெற உள்ளது. அதைத் தொடர்ந்து கோயில் நடை அடைக்கப்படும். அதன் பின் கோயில் நடை மகர விளக்கு உற்சவத்துக்காக டிசம்பர் 30ஆம் தேதி மாலை திறக்கப்படும். மகர விளக்கு பூஜை ஜனவரி 14-ஆம் தேதி நடைபெறும். பக்தர்கள் சுவாமி ஐயப்பனை ஜனவரி 19-ஆம் தேதி வரை தரிசனம் செய்யலாம்.

கோயில் நடை ஜனவரி 20-ஆம் தேதி அடைக்கப்படும். ஐயப்பன் கோயிலில் நடை திறந்திருக்கும் காலகட்டத்தில் ஒவ்வொரு நாளும் 80 ஆயிரம் பக்தர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருச்செந்தூர் கோயிலில் முருகன்-தெய்வானை திருக்கல்யாணம்

திருச்செந்தூர், நவ. 16: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் திங்கள்கிழமை நள்ளிரவு முருகன்-தெய்வானை அம்மன் திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மொய் எழுதி வழிபட்டனர்.

புகழ்பெற்ற இக்கோயிலின் கந்த சஷ்டி விழா கடந்த நவ. 10-ஆம் தேதி தொடங்கியது. சிகர நிகழ்வான சூரசம்ஹாரம் ஞாயிற்றுக்கிழமை (நவ. 15) மாலை கோயில் கடற்கரை வளாகத்தில் நடைபெற்றது. இதில், பல லட்சம் பக்தர்கள் கலந்துகொண்டு வழிபட்டனர்.

திங்கள்கிழமை (நவ. 16) சுவாமி திருக்கல்யாண வைபவத்தை முன்னிட்டு காலை 6 மணிக்கு தெய்வானை அம்மன் தவசுக்கு புறப்பட்டு, தெற்கு ரதவீதி வழியாக தெப்பக் குளம் தெருவில் உள்ள தவசு மண்டபத்துக்கு வந்தார். அங்கு அம்மனுக்கு ஏராளமான பெண் பக்தர்கள் மாவிளக்கு ஏற்றி வழிபட்டனர். ஸ்ரீ இராமையா பாகவதர் நினைவு நிலை செந்தில் முருகன் நடுநிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவ, மாணவியர், ஆசிரியர்கள், நிர்வாகிகள் செந்தில் குறவஞ்சி பாடல் பாடினர்.



திருச்செந்தூரில் திருக்கல்யாண வைபவத்தை முன்னிட்டு நடைபெற்ற சுவாமி-அம்மன் தோள் மாலை மாற்றும் நிகழ்ச்சி.

மாலையில் சுவாமி குமரவிடங்கப்பெருமான் மாப்பிள்ளை கோலத்தில் தனிச் சப்பரத்தில் எழுந்தருளி புளியடித் தெரு, சபாபதிபுரம் தெரு, தெற்கு ரதவீதி வழியாக வந்து தவசு மண்டபத்தில் தெய்வானை அம்பாளுக்கு காட்சியளித்தார்.

தொடர்ந்து தெற்கு ரதவீதி-மேல ரதவீதி சந்திப்பில் வைத்து சுவாமியும் அம்மனும் தோள் மாலை மாற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. பிறகு இருவரும் கோயிலை அடைந்தனர். நள்ளிரவு கோயிலில் வைத்து திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு மொய் எழுதி, பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

விழா ஏற்பாடுகளை திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் அருள்முருகன், அறங்காவலர்கள் வனிதா, அரிஸ்டோ லோக நாதன், செல்வராஜ், பிரபாகரன், இணை ஆணையர் அருணாசலம், துணை ஆணையர் யக்ஞ நாராயணன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

ஏழுமலையானை தரிசிக்க 15 மணி நேரம்

திருப்பதி, நவ. 16: திருமலை ஏழுமலையானை தரிசிக்க பக்தர்கள் தர்ம தரிசனத்தில் 15 மணி நேரம் காத்திருந்தனர்.

திருமலையில் திங்கள்கிழமை காலை நிலவரப்படி, வைகுண்டம் காத்திருப்பு அறைகளில் உள்ள 31 அறைகளும் நிறைந்து வெளியே உள்ள தரிசன வரிசையில் பக்தர்கள் ஏழுமலையான் தரிசனத்துக்காக காத்திருந்தனர். தர்ம தரிசனத்துக்கு 15 (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) மணி நேரமும், ரூ. 300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணி நேரமும் ஆனது. நேரடி இலவச தரிசன டோக்கன்கள் நள்ளிரவு முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஏழுமலையானை ஞாயிற்றுக்கிழமை முழுவதும் 83,386 பக்தர்கள் தரிசனம் செய்தனர்

உண்டியல் மூலம் பக்தர்கள் சமர்ப்பித்த காணிக்கைகளைக் கணக்கிட்டதில், ரூ. 4.95 கோடி வசூலானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

கோவா சர்வதேச திரைப்பட விழாவில் பாரதிராஜா, பாக்யராஜ் திரைப்படங்கள்

சென்னை, நவ. 16: கோவாவில் நடைபெறவுள்ள 57-ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் மறைந்த இயக்குநர்கள் பாரதிராஜா மற்றும் பாக்யராஜ்க்கு புகழஞ்சலி செலுத்தும் வகையில், 'முதல் மரியாதை' மற்றும் 'முந்தானை முடிச்சு' திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

கோவாவில் 57-ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா நவ. 20-ஆம் தேதிமுதல் நவ. 28-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த விழாவில் 137-க்கும் அதிகமான நாடுகளில் இருந்து 1,900-க்கும் அதிகமான படங்கள் திரையிடுவதற்காகப் பரிசீலனைக்கு வந்தன. அதில், 86 நாடுகளில் இருந்து 150-க்கும் அதிகமான சர்வதேச திரைப்படங்கள் திரையிட தேர்வாகி உள்ளன. இந்த விழாவில், இந்திய திரைப்படப் பிரிவில் 18 மொழிகளைச் சேர்ந்த 76 திரைப்படங்கள் இடம் பெற்றுள்ளன.

மேலும், இந்தியன் பனோரமா பிரிவில் சிவகுமார் முருகேசன் இயக்கத்தில் நடிகை ராதிகா நடிப்பில் வெளியான 'தாய் கிழவி' திரைப்படம் திரையிட தேர்வாகியுள்ளது. அதேபோல், இயக்குநர் சத்ய சிவா இயக்கத்தில் உருவாகியுள்ள 'அறிவு' திரைப்படம், டிச.11-ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக வுள்ள நிலையில், அதற்கு முன்பே, 57-ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் திரையிட தேர்வாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் மறைந்த இயக்குநர்கள் பாரதிராஜா, பாக்யராஜ் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அவர்கள் இயக்கிய 'முதல் மரியாதை' மற்றும் 'முந்தானை முடிச்சு' திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

மேலும், இந்தியன் பனோரமா பிரிவின் தொடக்கமாக 'துராந்தர்' படமும், இறுதியாக 'பிகம்மிங்' படமும் திரையிடப்படவுள்ளன. இந்தப் பிரிவில் திரையிட நிவின் பாலி நடித்த 'சர்வம் மாயா' திரைப்படமும் தேர்வாகியுள்ளது. பிரிக்ஸ் சினிமா பிரிவின் தொடக்கமாக 'ராமாயணா' படம் திரையிடப்படவுள்ளது.

வழக்கமாக இந்த சர்வதேச திரைப்பட விழாவுக்கு 20-க்கும் மேற்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் அனுப்பி வைக்கப்படும் நிலையில், இந்த முறை 8 படங்கள் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஃபாதர்லேண்ட்ஸ்: இந்த விழாவின் தொடக்க திரைப்படமாக, 79-ஆவது கேன்ஸ் திரைப்பட விழாவில் சிறந்த இயக்குநருக்கான விருது வென்ற போலந்து நாட்டின் இயக்குநர் பாவெல் பாவ்லிகோவ்ஸ்கியின் ஃபாதர்லேண்ட் திரைப்படம் திரையிடப்பட உள்ளது.

GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்.

பெருநிறுவன அலுவலகம்/ தலைமை அலுவலகம்: GICHFL, நேஷனல் இன்சூரன்ஸ் பில்டிங், 6 வது தளம், 14, ஜாம்ஷெட்ஜி டாடா சாலை, சர்ச்கேட், மும்பை 400 020 தொலைப்பேசி.: (022) 43041900 மின்னஞ்சல்: corporate@gichf.com இணையத்தளம் : www.gichfindia.com
கிளை அலுவலக முகவரி: கோயம்புத்தூர் கிளை: GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். F-4/03, 4வது தளம், KCR பிசினஸ் டுடே., டாடாபாத், 7வது தெரு, கோயம்புத்தூர் - 641012. அலுவலகத் தொலைப்பேசி: 0422-2490927, 2495790, கிளை மின்னஞ்சல் முகவரி: coimbatore@gichfindia.com
அதிகாரப்பூர்வ அலுவலர்: தொடர்பு விவரங்கள் : கீது தெரசா மேத்யூ - 7358217692 / 90431 96488 மின்னஞ்சல் முகவரி : geethu.mathew@gichf.com

மின் ஏல விற்பனை அறிவிப்பு

மின் ஏல நாள்: 21-12-2026 / ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்: 19-12-2026

இதன்படி, கீழே கையொப்பமிட்டுள்ளவர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 இன்கீழ் GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட் (GICHFL)-இன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்படி சட்டம் பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து மீதான் உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும், பின்வரும் கடன்தாரர்கள் / அடமானதாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பு அனுப்பி அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலுவைத்தொகையை திருப்பி செலுத்த கோரினார். எனினும், கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் அந்த நிலுவைத்தொகையை திருப்பி செலுத்த தவறியமையால், பின்வரும் சொத்துக்களை மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14 மற்றும் இதன் தொடர்புடைய மேற்சொன்ன விதிகளில் விதி 8 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தி GICHFL-இன் அதிகாரப்பூர்வ அலுவலர்கள் **நேரடி சுவாதீனம் எடுத்துள்ளனர்.**

வ. எண்	கடன் கணக்கு எண்/ கடன்தாரர் / கூட்டு கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் / கிளை	சொத்து முகவரி & சொத்தின் பரப்பளவு (கட்டுமானப் பரப்பளவு சதுர அடியில்)	கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள்	நேரடி / அடையாள சுவாதீன நாள்	06.11.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவை (POS, வட்டி மற்றும் இதர கட்டணங்கள் உட்பட.) (ரூபாயில்)	குறைந்த பட்ச கேட்பு விலை (ரூபாயில்)
1	TN00806001016 13/ கிருஷ்ணகுமார். P. (கடன்தாரர்) K. விசாலாட்சி (கூட்டு- கடன்தாரர்)/ குமார். S (ஜாமீன்தாரர்)	SF எண் **170/1B1,1B2,1C1,1C2,** மனை எண் 28 வடக்குப்பாகம் & 35 தென்பாகம், கங்கா நகர், எண் 2 , கூடலூர் ஊராட்சி, கோயம்புத்தூர் - 641047 நிலப்பரப்பளவு - 1292 சதுர அடி	09-01-2014 & 16-03-2024	23-09-2026 (நேரடி சுவாதீனம்)	6,74,746/-	11,62,630/-

மின் ஏல தேதி மற்றும் நேரம்: 21.12.2026 இணையத்தளம் (https://bankauctions.in) - இல் பிற்பகல் 3:00 மணி முதல் மாலை 04:00 மணி வரை ஒவ்வொரு முறையும் எண்ணிலடங்கா 5 நிமிட தன்னியல்பு கால நீட்டிப்புடன்.
ஒப்பந்தப்புள்ளி / முத்திரையிட்ட ஏலப்புள்ளியை பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் டேவணித்தொகை மற்றும் KYC ஆவணங்களுடன் இணைய வழியிலோ அல்லது மேற்குறிப்பிட்ட GICHF-இன் அலுவலகத்தில் சமர்ப்பிக்க கடைசி தேதி - 19.12.2026 நாளன்று மாலை 5.00 மணிக்கு முன்பு.
மேற்சொன்ன சொத்துக்கள் / சொத்தினங்களின் மின் ஏல விற்பனைக்கான இந்த பொது அறிவிப்பு (சர்ஃபாசி சட்டம் 2002 விதிமுறைகள் மற்றும் நிபந்தனைமேலும் அதன் கீழான விதிகளின்படி) தொடர்பாக, முத்திரையிட்ட உறை/உறைகள் அல்லது இணைய வழியில் மேற்சொன்ன சொத்துக்களை **"இருக்கின்ற இடத்தில்"** மற்றும் **"இருக்கின்ற நிலையில்"** என்ற அடிப்படையில் வாங்குவதற்கான விலைப்புள்ளிகளை GICHFL வரவேற்கிறது.

ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:-

1. **மின் - ஏலமானது "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" " இருப்பவை எல்லாம்" மற்றும் "எந்தவிதத்திலும் திரும்ப பெறத்தகாத வகையில்"** என்ற அடிப்படையில், 'இணைய வழியில் ' நடத்தப்படும். மின் - ஏலமானது GICHF-ன் அங்கீகரிக்கப்பட்ட மின்னணு ஏல சேவைதாரர் **"M/s.4 closure"** மூலம் நடத்தப்படும்.
2. **விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது பெயர்களை வலைதளம் https://bankauctions.in/ ல் பதிவு செய்து, தங்களது பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை இலவசமாக பெற்றுக்கொள்ள வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் இணையவழி ஏலத்திற்கான இணையவழிப் பயிற்சியை சேவை வழங்குநரான M/s. 4 Closure, #605A, 6ஆவது தளம், மைத்ரிவனம், அமீர்பேட்டை, ஹைதராபாத்-500038, தெலங்கானா-இடமிருந்து பெறலாம். தொடர்புக்கு: அலுவலக தொலைப்பேசி எண். 040-23736405 உதவி அணி:சாரி பித்ரா- 8142000061 , ரேகா 8142000066 மற்றும் சோனுவால் 8142000063 மின்னஞ்சல்: info@bankauctions.in T ஜெயபிரகாஷ் ரெட்டி, மேலாளர்- செயல்பாடுகள், அலைபேசி எண் - 8142000064 prakash@bankauctions.in, திரு. விஷால் நாத் அலைபேசி எண் 8142000735 மின்னஞ்சல்: tnkl@bankauctions.in சொத்து விசாரணைகள், GICHFL தொடர்பு விபரங்கள் - கீது தெரசா மேத்யூ - 7358217692 / 90431 96488**
3. **மின் ஏல விற்பனையானது சர்ஃபாசி சட்டம் / விதிகள் 2002 ல் பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் இதன் கீழ்குறிப்பிட்ட / வலைதளத்தில் உள்ள மற்றும் விருப்பமுள்ள / பங்கேற்கும் ஏலதார்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைப்புள்ளி / ஏலப்புள்ளி ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டதாகும்.**
4. ஒவ்வொரு ஏலதாரரும் இணைய வழி மின் ஏலத்தில் பங்கேற்க அவரது / தமது சொந்த மின்னஞ்சல் முகவரியை கொண்டிருக்க வேண்டும்.
5. GICHF-ன் அதிகாரப்பூர்வ அலுவலர் முன்பு, ஒருமுறை விருப்பமுள்ள ஏலதாரர் முறையாக ஒரு தகுதியுற்ற ஏலதாரராக பதிவு செய்துவிட்டால், அவர் ஆவணங்களை சமர்ப்பித்து மின் - விலைகோரல் தளத்தில் பங்கேற்க தமது விருப்பத்தை தெரிவிக்க வேண்டும். மின் ஏல சேவை வழங்குநரிடம் இருந்து உள்நுழை அடையாளப் பெயர் மற்றும் கடவுச்சொல்லை பெறுவது ஏலதாரரின் / இணையவழி ஏலதாரரின் முழு பொறுப்பாகும்.
6. மேற்சொன்ன சொத்துக்கள் இதன் மேற்குறிப்பிட்ட குறைந்தபட்ச கேட்பு விலைக்கு குறைவாக விற்பனை செய்யப்படமாட்டாது.
7. விருப்பமுள்ள ஏலதார்கள் தங்களது டேவணித்தொகை/களை அஃதாவது இதன் மேற்குறிப்பிட்ட அந்தத்த குறைந்தபட்ச கேட்பு விலைகளின் 10% தொகையை "GIC Housing Finance Ltd" என்ற பெயருக்கு DD / RTGS / NEFT மூலம் செலுத்த வேண்டும். வங்கி விபரங்கள் பின்வருமாறு - **வங்கி பெயர் : யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, கணக்கு எண்: 005111010000039, கணக்கு பெயர் : GIC HOUSING FINANCE LTD AUCTION A/C கிளை பெயர் : LCB, கோட்டை, முகவரி : யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, 239 பேக்பே ரெக்லமேடியோ நரிமன் பாயிண்ட், மும்பை, மகாராஷ்டிரா, அஞ்சல்குறியீடு 400021, IFSC எண்: UBIN0800511.**
8. வெற்றி பெற்ற ஏலதாரராக / ஏலதார்களாக இருப்பின், மேற்சொன்ன டெபாசிட்/கள் கழித்துக்கொள்ளப்படும் இல்லையெனில் திருப்பி தரப்படும். மேற்சொன்ன டேவணித்தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது.
9. மேற்சொன்ன டேவணித்தொகை மற்றும் KYC ஆவணங்கள் மற்றும் நிரந்த கணக்கு அட்டை & முகவரி சான்றுகளுக்கான ஸ்கேன் நகல்களுடன் கூடிய விலைப்புள்ளிகளை சேவை வழங்குநருக்கு வலைதளம் **https://bankauctions.in/** மூலம் "இணைய வழியிலோ" அல்லது விலைப்புள்ளி படிவம், டேவணித்தொகை மற்றும் KYC ஆவணங்களுடனான மூடி முத்திரையிடப்பட்ட உறையிலோ, GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட் - ன் அந்தந்த கிளை அலுவலகங்களுக்கு டேவணித்தொகை சமர்ப்பிக்கும் கடைசி நாளுக்குள்ளோ அதற்கு முன்போ கிடைக்குமாறு சமர்ப்பிக்கலாம்.
10. விலைப்புள்ளிகளை திறந்த பிறகு, விருப்பமுள்ள ஏலதார்களில் குறைந்த பட்சக் கேட்பு விலைக்கு குறைவிலாது விலை கோரிய நபர்களுக்கு மட்டுமே அதிகாரப்பூர்வ அலுவலரின் முழு அதிகார வரம்பில் விலைப்புள்ளியை அதிகரிக்க வாய்ப்பு வழங்கப்படும்.
11. வெற்றி பெற்ற ஏலதார்/கள் விலைத்தொகையில் 25% தொகையை (ஏற்கனவே செலுத்திய டேவணித்தொகையை கழித்து) அதிகாரப்பூர்வ அலுவலரால் விற்பனைக்கான விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனேயே செலுத்த வேண்டும்., தவறும் பட்சத்தில், செலுத்தப்பட்ட டேவணித்தொகை அபராதமாக கருதி கழித்துக்கொள்ளப்படும். விற்பனை விலையின் மீதி 75% அதிகாரப்பூர்வ அலுவலரால் தனது முழு அதிகாரத்தில் விற்பனை உறுதிப்படுத்தப்பட்டதிலிருந்து 15 நாள்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். மீதி தொகையை உரிய காலக்கெடுவுக்குள் செலுத்த தவறினால், செலுத்தப்பட்ட தொகை அபராதமாக கருதி கழித்துக்கொள்ளப்படும். அதிகாரப்பூர்வ அலுவலர், அபராதமாக கருதி கழித்துக்கொள்ள வெற்றி பெற்ற ஏலதாரருக்கு மேற்கொண்டு எந்த அறிவிப்பும் கொடுக்க வேண்டியதில்லை.
12. விலைகோருபவர்கள் ''வாங்குபவரே கவனமாக இருக்க வேண்டும்''(வாங்குநர் ஜாக்கிரதை) என்ற தத்துவத்துக்கு கட்டுப்பட்டவராவர்., மேலும் நிறுவனம் அல்லது கடனீட்டு சொத்து மீது ஏதேனும் வில்லங்கங்கள், சட்ட ரீதியிலான கடன் பொறுப்புக்கள், சொத்து வரி நிலுவைகள் , வருமான வரி, கலால் வரி, தொழிலாளர் நிலுவைகள், மின் மற்றும் பராமரிப்பு நிலுவைகள் போன்றவை ஏதேனும் இருக்கின்றனவா என்பனவற்றைப் பொருத்து தங்களது சுய விசாரணைகளை கவனமுடன் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். வெற்றி பெற்ற ஏலதார்கள் அனைத்து நடப்புக் கட்டணங்கள் அஃதாவது நகராட்சி வரிகள், நிர்வாக / சமூக கட்டணங்கள், மின் கட்டணங்கள், தண்ணீர் கட்டணங்கள், முத்திரை தீர்வை, பதிவு கட்டணங்கள் (பொருந்துமாயின்) இதர நிகழ் செலவுகள், செலவுகள் உள்ளிட்ட அந்தந்த சொத்துக்கள் தொடர்பான விற்பனை விலை நீங்கலாக உள்ள அனைத்தையும் தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
13. வெற்றி பெற்ற ஏலதார், விற்பனை சான்றிதழ் மீது செலுத்தத்தக்க கட்டணங்கள் / தொகைகளான பதிவு கட்டணம், கடனீட்டு சொத்தை தமது பெயரில் மாற்றிக்கொள்ள உண்டான முத்திரை தீர்வை, வரிகள் அல்லது ஏதேனும் இதர தீர்வைகள் போன்றவற்றை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
14. விற்பனை விலையை / முழுத்தொகையையும் பெற்ற பிறகே, விற்பனை சான்றிதழ் வெற்றி பெற்ற ஏலதாரரின் பெயரில் மட்டுமே வழங்கப்படும்.
15. மேற்சொன்ன சொத்துக்களை அதிகாரப்பூர்வ அலுவலரின் வசதிக்கேற்ப, வேண்டுகோளின் பேரில் ஆய்வு செய்து கொள்ளலாம்.
16. அதிகாரப்பூர்வ அலுவலர், கோரப்பட்ட அதிகபட்ச விலைப்புள்ளியையோ அல்லது அனைத்து அல்லது ஏதேனும் விலைப்புள்ளிகளையோ ஏற்றுக்கொள்ள கட்டாயமாகப்பட்டவரல்லர்., மேலும் அவர் ஏதேனும் அல்லது அனைத்து விலைப்புள்ளிகளையும் எக்காரணமும் கூறாமல் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்.
17. இதன் மேற்குறிப்பிட்ட சொத்துக்களின் மீதுள்ள எந்த விதமான கடன் பொறுப்புக்கும் GICHFL பொறுப்பன்று. சொத்து **"இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருப்பவை எல்லாம்" மற்றும் "எந்தவிதத்திலும் திரும்ப பெறத்தகாத வகையில்"** என்ற அடிப்படையில், ஏலம் விடப்படும்.
18. அதிகபட்ச ஏலதாரர் ஏலத் தொகையில் 25% (செலுத்தப்பட்ட டேவணித்தொகை உட்பட) விற்பனை அறிவிப்பின் அடிப்படையில் உடனடியாகவும் ஏலத் தொகையில் மீதமுள்ள 75% தொகையை 15 நாள்களுக்குள் செலுத்த வேண்டும் அல்லது சம்பந்தப்பட்டவர்கள் (AO மற்றும் வெற்றிகரமான ஏலதாரர்) இடையே ஒப்புக் கொள்ளப்பட்ட நீட்டிக்கப்பட்ட காலத்துக்குள் செலுத்தவேண்டும்.
19. **குறைந்தபட்ச ஏல உயர்வுத் தொகை: ரூ.10,000/-**

சட்டப்பூர்வ 30 நாள் விற்பனை அறிவிப்பு - சர்ஃபாசி சட்டம், 2002-ன் கீழானது

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், சொத்துக்களின் முழு விபரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட மின்- ஏல சேவைதாரர் M/s. 4 closure-ன் வலைத்தளத்தையும், வலைத்தளம் https://bankauctions.in யையும் தயவு கூர்ந்து பார்வையிடவும்.

நாள் : 17.11.2026
இடம் : கோயம்புத்தூர்

GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., சார்பில்
ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்

பாரதியும், பாரதிதாசனும் தமிழுக்கு கிடைத்த மகாகவிகள்

எழுத்தாளர் ய. மணிகண்டன்

மதுரை, நவ. 16: பாரதியும், பாரதிதாசனும் தமிழுக்கு கிடைத்த 'மகாகவிகள்' என சென்னை பல்கலைக்கழக தமிழ் மொழித் துறையின் முன்னாள் தலைவரும், எழுத்தாளருமான ய. மணிகண்டன் தெரிவித்தார்.

மதுரை தமுக்கம் மாநாட்டு மையத்தில் நடைபெறும் புத்தகத் திருவிழாவின் 3- ஆம் நாளான திங்கள்கிழமை மாலை நடைபெற்ற இலக்கிய விழாவில், 'இரு மகாகவிகள்' என்ற தலைப்பில் ய. மணிகண்டன் மேலும் பேசியதாவது:

பாரதி, பாரதிதானின் புகழ் மதுரை மாநகர் முழுமையிலும் பரவிக் கிடக்கிறது. இவர்கள் இருவருக்கும் மதுரையுடனான தொடர்பு மிக அதிகம். சிறை வாசம் முடிந்து வெளியே வந்த பாரதி, எட்டயபுரம், கானாடுகாத்தான், காரைக்குடி உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்ற பின்னர்தான் சென்னைக்கு செல்கிறார். அங்கு முதல் கூட்டம் நடத்த வேண்டும் என்பது அவரது விருப்பம்.

சிறைக்குச் சென்று வந்திருந்ததால், பாரதி நடத்திய கூட்டத்துக்கு மதுரையைச் சேர்ந்தவரும் சென்னை மாகாணத்தின் தலைமை நீதிபதியாகப் பொறுப்பு வகித்தவருமான சுப்பிரமணிய ஐயர் தலைமை வகித்தார். இதுபோன்ற எண்ணற்ற நிகழ்வுகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

பாரதி கடவுள் பற்றுள்ளவர்; பாரதிதாசன் கடவுள் மறுப்பு சிந்தனையாளர்; இவர்கள் இருவருக்குமான உறவு குரு, சீடர் என்ற நிலையிலேயே கடைசி வரை தொடர்ந்தது. இருவரிடமும் பகுத்தறிவுச் சிந்தனை அதிகம் மேலோங்கி இருந்தது. ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியால் அப்போது கடும் கட்டுப்பாடு இருந்தது. மகாகவி பாரதியின் குடும்பம் வறுமையில் வாடியது. இருப்பினும், அதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப்படாமல், வாழ்க்கை குறித்த தனது கவிதையில் 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா' என துணிச்சலாகக் கூறினார். எத்தகைய சூழ்நிலைக்கும் அஞ்சாத மகாகவியால் மட்டுமே இவ்வாறு பாட முடியும். இதேபோல, பாரதிதாசனும் 'வையம் என்பது இன்பக் கடல்' என்கிறார். நம்பிக்கைதான் வாழ்க்கை என்பதையே பாரதியும், பாரதிதாசனும் கூறுகின்றனர். தாங்கள் வாழ்ந்த காலத்தில் மாற்றத்தைக் கொண்டுவந்தவர்கள்தான் மகாகவிகளாக இருக்க முடியும்.

மொழிப் பற்று, விடுதலை உணர்வு, பிறருக்கு உதவுதல் எனப் பல நிலைகளிலும் இருவரும் சுயநலமின்றி ஒரே நேர்கோட்டில் பயணித்தவர்கள். தமிழ் மொழிக்காகவும், தமிழ்ச் சமுதாயத்துக்காகவும் உழைத்த கவிஞர்கள் பாரதியும், பாரதிதாசனும் என முன்னாள் முதல்வர் அண்ணாவும் எழுதியுள்ளார். சிறப்பு மிகுந்த கவிஞர்களை தமிழ்ச் சமூகம் கொண்டாடத் தவறுகிறது. நமது நாட்டில் ரவீந்திரநாத் தாகூருக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் இவர்களுக்கு அளிக்கப்படவில்லை.



மதுரை தமுக்கம் மாநாட்டு மையத்தில் திங்கள்கிழமை மாலை நடைபெற்ற இலக்கிய நிக